# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப. (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 39/மா/2017

ஆணை எண். 145/2017

நாள் : 14/06/2017

திரு . அ. மைக்கேல்,
பொன்மலை,
திருச்சிராப்பள்ளி – 620 004.      – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர்,
பொன்மலைக்கோட்டம்,
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி.      – எதிர் மனுதாரர்

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, பொன்மலைக்கோட்டம், திருநகர், 145–முதல் தெருவில் வசிக்கும் திரு அ. மைக்கேல் அவர்களின் 06.03.2017 நாளிட்ட முறையீட்டு மனு, 08.03.2017 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 39/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மேற்குறிப்பிட்ட முறையீட்டு மனுவினைத் தொடர்ந்து மனுதாரின் 10.05.2017 நாளிட்ட மனுவும் பெறப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனுக்கள் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, பொன்மலைக்கோட்டம், திருநகர், 145–முதல் தெருவில் வசிக்கும் திரு அ. மைக்கேல் என்பவர் கீழ்க்காணும் குற்றச்சாட்டுகளைத் தெரிவித்து இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார் :-

1. குண்டூர் – கீழ்க்குறிச்சி எல்லையில் பாசன நிலத்தை ஆக்கிரமித்து மனைப்பதிவு செய்தது ;

2. பட்டா மாறுதல் மோசடி செய்தது சம்பந்தமாக வட்டாட்சியர்கள் மற்றும் கோட்டாட்சியரை விசாரணை செய்தல் ;

3. புறம்போக்கு நிலம் ஆக்கிரமிப்பு சம்பந்தமாக மாவட்ட ஆட்சியரை விசாரித்தல் ;

4. விளம்பரப் பலகை வைக்க தடை இருந்தும், விளம்பரப் பலகை மூலம் மனை, வீடு மோசடி;

5. பத்திரப் பதிவுத் துறை அலுவலர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளுதல்;

6. மனை நிலம் இல்லாத திரு K. மைக்கேல் ராஜ், 112 ஏக்கர் கிரையம் செய்து கொடுத்தது ;

7. வாய்க்கால் புறம்போக்கு மற்றும் பாதை ஆக்கிரமிப்பு இல்லை என வருவாய் துறையினர் தெரிவித்தது மற்றும் அந்நிலங்களில் வாரச் சந்தை நடத்துவது;

8. 261 மனைகளை, 2008 ஆம் ஆண்டில் வரன்முறைபடுத்தி ஆணை வெளியிட்டது. ஆனால் பாதைகளை மாநகராட்சியிடம் 2011–ல் ஒப்படைத்தது;

9. குண்டூர் ஊராட்சி மன்றத் தலைவர் திரு மாரியப்பன் அனுமதிக்கப்படாத மனைப்பிரிவில் வீடுகள் கட்ட 4 பேருக்கு அனுமதி வழங்கியது;

10. பள்ளிகள், அடுக்குமாடி வீடுகள் மற்றும் தொகுப்பு வீடுகள் கட்டியதை விசாரிக்கப்படுதல்;

11. குண்டூர் ஊராட்சிப் பகுதியில் 97 ஏக்கர் பரப்பில் உள்ள BHEL நகருக்கு அனுமதி வழங்கியது;

12. நடைபெற்ற முறைகேடுகள் குறித்து கோட்டாட்சியருக்கு தெரிந்தும் நடவடிக்கை எடுக்கப்படாதது;

13. திரு E. மரிய மைக்கில் அவர்களின் நிலம் முறைகேடாக விற்பனை செய்யப்பட்டு பின் நீதிமன்ற ஆணையின் கீழ் ரத்து செய்தது;

14. பாசனக் கால்வாய் ஆக்கிரமிக்கப்பட்டு விற்பனை செய்தது;

15. இரையப்பா உடையார் குளம் ஆக்கிரமிப்பு;

16. மாவட்ட ஆட்சியர் அனுமதி இல்லாமல் தமிழ்நாடு மின்வாரிய திருச்சி மண்டல அலுவலர் தனியார் பட்டா நிலத்தில் மின் கம்பம் (ம) கேபிள் அமைத்தது;

17. மொரைஸ் சிட்டி விரிவாக்கத்தை தடுத்து நிறுத்த வேண்டுதல்;

18. பவர் சொத்தை தானமாக வழங்க இயலுமா எனதெரிவிக்கக் கோருதல்;

19. 2008–ஆம் ஆண்டு மொரைஸ் சிட்டி நிறுவனத்தின் மனைப்பிரிவுகளுக்கு அனுமதி வழங்கியதிலிருந்து 10.05.2017 வரை ஊழலுக்கு துணைபோகும் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுத்தல்;

20. மொரைஸ் சிட்டி நிலத்தின் புல எண்.213–ஐ போலி நபர் மூலம் பத்திரப்பதிவு செய்தது.

2. மேற்குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள் சம்பந்தமாக முறையீட்டு மனுதாரர், 19.04.2017 அன்று விசாரிக்கப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. விசாரணையின்போது பாசனக் கால்வாய் ஆக்கிரமிக்கப்பட்டு பள்ளி, வணிக வளாகம் மற்றும் அடுக்குமாடி கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன எனத் தெரிவித்தார். குளத்தின் மூன்று மதகுகளும் மூடப்பட்டுள்ளன என்றும் ஆக்கிரமிப்பாளர்

மொரைஸ் வாரன்ஸ் மீது நிலமோசடி வழக்கு பதிவு செய்யப்பட்டு FIR போடப்பட்டுள்ளதாகவும், பிணையில் உள்ளார் என்றும் விசாரணையின்போது தெரிவித்தார். மேலும், 11 நபர்களின் நிலம் மோசடியாக விற்பனை செய்யப்பட்டு பத்திரப்பதிவுகள் செய்யப்பட்டுள்ளன என முறையீட்டு மனுதாரர் தெரிவித்தார். திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, பொன்மலைக் கோட்டத்தில், வரன்முறைப்படுத்தப்படாத மூன்று மனைகளுக்கு அனுமதி வழங்கியது தவறு என்றும் தெரிவித்தார்.

3. முறையீட்டு மனுதாரரின் மேற்குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள் குறித்து மாநகராட்சி ஆணையரின் அறிக்கை கோரப்பட்டது. திருச்சிராப்பள்ளி மாநகராட்சியின் தனி அலுவலர் மற்றும் ஆணையர் தனது 13.05.2017 நாளிட்ட கடிதத்தில், மொரைஸ் சிட்டி அமைந்துள்ள நிலத்தின் FMB, SLR, பதிவுசெய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும் காலிமனை வரன்முறைப்படுத்தியது மற்றும் திட்ட மற்றும் கட்டிட அனுமதி வழங்கிய ஆவணங்களின் நகல்களை இம்முறைமன்ற நடுவத்தின் பரிசீலனைக்கு அனுப்பியுள்ளார்.

4. முறையீட்டு மனுதாரரின் குற்றச்சாட்டுகள், விசாரணையின்போது அவர் அளித்த வாக்குமூலம் மற்றும் மாநகராட்சி ஆணையர் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டன. 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 2 (3)-ல் "முறையீடு" என்பதற்கு உள்ளாட்சியில் பணிபுரியும் பொதுப்பணியாளர் ஒருவரின் அல்லது உள்ளாட்சி அமைப்பு ஒன்றின் ஊழல் அல்லது சீர்கேடான நிர்வாகம் பற்றிய குற்றச்சாட்டின் விவரவுரை எனப்பொருள்படும் என வரையறை செய்துள்ளது. மேலும், மேற்படிச் சட்டப்பிரிவு 2(7)–ல் "உள்ளாட்சி அமைப்பு" என்பதற்கு வழங்கப்பட்டுள்ள வரையறையில், உள்ளாட்சி அமைப்பு என்பது தற்போது செயலாற்றிவருகின்ற 12 மாநகராட்சிகள், 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்படி அமைத்துருவாக்கப்பட்ட ஒரு நகராட்சி மன்றம் அல்லது 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்படி அமைத்துருவாக்கப்பட்ட ஒரு மாவட்ட ஊராட்சி என்று பொருள்படும். "பொதுப்பணியாளர்" என்பதற்கு வழங்கப்பட்ட வரையறையில் "தலைமையர், துணைத் தலைமையர், மேயர் அல்லது துணை மேயர்" உள்ளடங்கலாக உள்ளாட்சி அமைப்பின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரொருவர் என்று பொருள்படும் மற்றும் உள்ளாட்சி அமைப்பின் கீழ் பணி செய்து கொண்டிருக்கும் அதிகாரிகள் மற்றும் பணியாளர்களை உள்ளடக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், முறையீட்டில் கூறப்பட்டுள்ள நிகழ்வு நடைபெற்ற தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகள் முடிவடைந்த பின்பு தாக்கல் செய்யப்பட்டுள்ள முறையீடு எதனையும் மேற்குறிப்பிட்ட சட்டம், பிரிவு 10(3)(c)–ன் கீழ் இம்முறைமன்ற நடுவத்தால் விசாரணை மேற்கொள்ள இயலாது.

5. இந்நேர்வின் முறையீட்டு மனுதாரர் சுமார் 20 குற்றச்சாட்டுகளைத் தெரிவித்து இம்முறை மன்ற நடுவத்தில் முறையீட்டு மனுவினைத் தாக்கல் செய்துள்ளார். பொது நல அக்கறையுடன், அரசு நிலங்கள், பாசனக் கால்வாய்கள் ஆக்கிரமிப்பு குறித்தும், போலி சொத்து மாற்றம் ஆவணங்கள் பதிவு செய்தது குறித்தும் முறையீடு செய்துள்ளார். மேலும், வருவாய்த் துறை மற்றும் பத்திரப்பதிவுத் துறை சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரியுள்ளார். மேலே, பத்தி 4–ல் குறிப்பிடப்பட்டுள்ள சட்டப்பிரிவுகளின் படி, மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் மாவட்ட ஊராட்சி போன்ற உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் அந்த உள்ளாட்சி அமைப்புகளில் செயலாற்றி வரும் பொதுப்பணியாளர்கள் தவிர்த்து, பிற நிர்வாக அமைப்புகள் மற்றும் அதில் பணியாற்றும் அலுவலர்கள் சம்பந்தப்பட்ட முறையீடு எதனையும் இம்முறை மன்ற நடுவத்தின் நடவடிக்கைக்கு உட்படுத்த இயலாது.

6. திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, பொன்மலைக்கோட்டம், கொடப்பட்டு கிராமம் புல எண்கள் 212, 215 முதல் 223 மற்றும் 225 முதல் 227 வரையிலான நிலங்களில் திரு S. கான்சாம் என்ற நபரால் ஏற்படுத்தப்பட்ட அங்கீகாரமற்ற மனைப்பிரிவுகளை, 26.06.2008 நாளிட்ட திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையரின் செயல்முறை எண்.3766/2008–ல் வரன்முறை செய்து ஆணையிடப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட புல எண்களில் உள்ள அனுமதியற்ற வீட்டுமனைப்பிரிவுகள், 19.01.2006 நாளிட்ட நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை அரசு ஆணை எண்.11–ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களின்படி வரன்முறைப்படுத்தப் பட்டுள்ளது. முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ள குற்றச்சாட்டுகளில், மேற்குறிப்பிட்ட புல எண்களில் ஏற்படுத்தப்பட்ட வீட்டுமனைகளை வரன்முறை செய்தது குறித்தும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அனுமதியற்ற வீட்டுமனைப் பிரிவுகளை வரன்முறை செய்து 2008 ஆம் ஆண்டில் ஆணையிடப்பட்டுள்ளது. இந்நிகழ்வு நடைபெற்று சுமார் 9 ஆண்டுகள் ஆகின்றன. 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 10(3)ன் கீழ், முறையீட்டில் கூறப்பட்டுள்ள இந்நிகழ்வு நடைபெற்ற தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகள் முடிவடைந்த பின்பு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, அனுமதியற்ற மனைப்பிரிவுகளை வரன்முறை செய்தது சம்பந்தமான முறையீட்டினை இம்முறைமன்ற நடுவத்தின் விசாரணைக்கும் உட்படுத்த இயலாது.

7. முறையீட்டு மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தின் விசாரணைக்கு உட்படுத்த இயலாத முறையீடுகளைத் தெரிவித்துள்ளதால் மேலே குறிப்பிட்ட அனைத்தும் மிகக்கவனமுடன் பரிசீலிக்கப்பட்டதில் உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவம் சட்டம் 2014–ன்படி இம்மனு ஏற்றிட இயலாததாய் உள்ளதால் தள்ளுபடி செய்து ஆணையிடப்படுகின்றது.

2017– ஆம் ஆண்டு, ஜூன் திங்கள், 14–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலகமுத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு . அ. மைக்கேல்,
145 – முதல் தெரு,
திரு நகர், பொன்மலை,
திருச்சிராப்பள்ளி – 620 004.

2. ஆணையாளர்,
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
திருச்சிராப்பள்ளி.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பேருராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்